கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண்.152/2012

வா.சா.1 - மகாலிங்கம்

நாள்.03.02.2026 த/பெ - தர்மர் நாடார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) நான் தாக்கல் செய்துள்ள வழக்கு பிராதை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். சீர்த்திருத்த பிராதை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். இவ்வழக்கில் 2 தபசில் சொத்துக்கள் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம், 2ம் தபசில் சொத்தின் சர்வே எண் என்ன என்றால் ஞாபகம் இல்லை. 2ம் தபசில் சொத்து என்பது தேசிய நெடுஞ்சாலை என்றால் என் இடத்திற்கு வடக்கு பக்கம் தான் ரோடு உள்ளது. 2ம் தபசில் சொத்து என்பது அரசு ரோடு புறம்போக்கு என்று சொல்லப்பட்டு இருந்தால் அது தவறு என்றால் சரியல்ல.

2) 2ம் தபசில் சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட ஆவணங்கள் ஏதும் உள்ளதா என்றால் உள்ளது, எனது தகப்பனார் எனக்கு உயில் எழுதியுள்ளார். மேற்படி உயில் எப்போது எழுதப்பட்டது என்றால் 1997 ம் வருடம் எழுதப்பட்டது, மாதம் ஞாபகம் இல்லை. 2ம் தபசில் சொத்தை அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 13 ஆண்டுகளுக்கு பின்பு தான் சீர்த்திருத்த பிராது மூலம் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 15.10.2025 நாளிட்ட 3வது சீர்த்திருத்த பிராதில்தான் இராதாபுரம் தாசில்தார், நெடுஞ்சாலை துறை, தமிழக அரசு கட்சி சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2 முதல் 4 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன், தற்போது ஞாபகம் இல்லை. 2ம் தபசில் சொத்தைநான் அனுபவம் செய்வதாக ஆவணங்கள் உள்ளதா என்றால் ஆவணங்கள் உள்ளது. மேற்படி அனுபவத்தை காட்ட என்ன ஆவணம் உள்ளது என்றால் பத்திரம், பட்டா உள்ளது. மேற்படி பத்திரங்கள் என்பது என்ன என்றால் எனது தகப்பனார் எழுதிய உயில் ஆவணம் ஆகும். 2ம் தபசில் சொத்தை பொறுத்து என் பெயரில் பட்டா மற்றும் தீர்வை உள்ளதா என்றால் உள்ளது.

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.03.03 13:48:49 +0530

3) இவ்வழக்கில் 2ம் தபசில் சொத்தை பொறுத்து நான் ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2ம் தபசில் சொத்து என்பது ஊர் மக்களால் அனுபவம் செய்யகூடிய இடம் என்றால் சரிதான், அது Highways Road ஆகும். நான் 2ம் தபசில் சொத்தை பொறுத்து என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் பாதையை மறித்து மண்டபம் கட்ட இருப்பதால் நான் பாதைக்கு வேண்டி வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எப்போது மேற்படி மண்டபம் கட்ட வந்தார்கள் என்றால் 2012ம் ஆண்டு வந்தார்கள்.

4) 2ம் தபசில் ரோட்டு பகுதியில் 1ம் பிரதிவாதி மண்டபம் கட்ட வந்ததாக பொய்யாக இவ்வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் தபசில் சொத்தை நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல, நான் அமைத்திருந்த ஓலை சேட் பகுதியை எடுத்துவிட்டேன். மேற்படி ஆக்கிரமிப்பை எப்போது எடுத்தேன் என்றால் கடந்த முறை இந்நீதிமன்றத்தில் என்னை விசாரணை செய்த அன்று எடுத்துவிட்டேன். நான் சொல்லுவது போல் 2ம் தபசில் சொத்தில் உள்ள ஆக்கிரமிப்பை நான் நீக்கவில்லை என்றால் சரியல்ல.

5) மேற்படி ஆக்கிரமிப்பு பகுதியை பொறுத்து உறுத்துகட்டளை பரிகாரம் கோர எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கோவில் கிழக்கு வாசல் 2ம் தபசில் சொத்தை நோக்கிதான் உள்ளது என்றால் சரிதான். நான் 2ம் தபசிலை பொறுத்து உறுத்து கட்டளை பெற்றால் 1ம் பிரதிவாதி கோவிலுக்கு அளவீட முடியாத கஷ்டநஷ்டம் ஏற்படும் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து சம்மந்தமாக நான் வில்லங்க சான்று பார்த்தேனா என்றால் பார்த்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தபசில் சொத்திற்குரிய வில்லங்கசான்று என்றால் சரிதான். மேற்படி தபசில் சொத்திற்குரிய வில்லங்கசான்றிதழ் அசல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) 12.03.1901 சிலையா அம்மாள் என்பவர் நல்லதம்பி நாடாருக்கு ஒரு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 30.03.1925 ல் ஆவணம் எண்.409/1925 ல் பிச்சாண்டி தேவர் என்பவர் ஊர் பொதுமக்கள் நன்மைக்காக சேதுமுகமது மரைக்காயர் 1, பெத்த பெருமாள், அந்தோணி மிக்கேல் பட்டங்கட்டியார் ஆகியோருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. பெத்த பெருமாள் நாடாருக்கு கொடுக்கப்பட்ட இடத்தில் தான் 1ம் பிரதிவாதி பத்திரகாளி அம்மன் கோவில் அமைந்துள்ளது என்றால் ஞாபகம் இல்லை. 1, 2 தபசில் சொத்துக்களில் எனக்கு தனிப்பட்ட உரிமை,



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.03.03 13:48:54 +0530

பாத்தியம், அனுபவம் ஏதும் இல்லை என்றால் சரியல்ல. நான் விளம்புகை பரிகோரம் கோராமல் தாக்கல்செய்துள்ள இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கு காலம் கடந்தது என்றாலும், இவ்வழக்கு காலாவதி தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. 1 முதல் 4 பிரதிவாதிகளை பொறுத்து வழக்கு மூலம் ஏதும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

வா.சா.1 குறுக்குவிசாரணை முடித்துவைக்கப்படுகிறது.

**மறுவிசாரணை** - இல்லை

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.03.03 13:48:57 +0530